# இலங்கையில் இடம்பெற்ற உயிர்ப்பு ஞாயிறு தினத் தாக்குதல் பற்றிய அறிக்கை

27 சித்திரை 2019

இலங்கையில் தவறாக வழிநடத்தப்பட்ட தீவிரவாதக் குழு ஒன்றினால் உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டதும் 350க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களின் உயிர்களைக் காவு கொண்டு நூற்றுக் கணக்கானோருக்குக் காயத்தை விளைவித்ததுமான அர்த்தமற்ற வன்செயலையிட்டு அப்றியேல் இளைஞர் வலையமைப்பு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறது.

துயர் தரும் இச்சமயத்தில், எமது எண்ணங்களும் பிரார்த்தனைகளும் பலியானோரின் குடும்பங்கள், அவர்தம் அன்புக்குரியவர்கள், அத்துடன் நாடு முழுவதிலுமுள்ள கிறிஸ்தவ சமூகங்கள் அனைத்தினதும் துயரங்களில் பங்கு கொள்கின்றன. அத்துடன் கால காலமாக இலங்கையின் ஏனைய சமூகத்தவர்களுடன் அருகருகே சமாதானமாக வாழ்ந்தவர்களும், இப்போது இச் சிறு தீவிரவாதக் குழுவின் செயலால் தம்மீது எதிர்த் தாக்கம் ஏற்படுத்தப்படுமோ என அஞ்சுபவர்களுமான முஸ்லிம் சமூகத்தவரோடும் எம்மனம் இணைகிறது. இதுபோன்ற தருணங்களில்தான் எமது உறுதியும் மனத் துணிவும் சோதிக்கப்படுகின்றன. எனவே, குழப்பமும் நிச்சயமற்ற நிலையும் நிறைந்த இவ்வேளையில் எம் சகோதரர்களுடன் கூட்டொருமைப்பாடு கொண்டு நிற்பது மிகவும் அவசியமானதாகும்.

தேவாலயங்கள், ஹோட்டல்கள் மீதான கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தாக்குதல்கள் குறித்து துரிதமாகவும் நியாயமாகவும் விசாரணை மேற்கொண்டு, முறையான ஒரு நீதிச் செயன்முறையின் மூலம் குற்றவாளிகளைக் கண்டறிந்து இதற்குப் பொறுப்புக் கூறச் செய்யுமாறு உரிய அதிகாரிகளைக் கேட்டு நிற்கிறோம். அதே வேளை இதில் சம்பந்தப்படாத நபர்கள் நீதிக்குப் புறம்பாகக் கைது செய்யப்படாதிருப்பதையும், அவர்கள்மீது வழக்குத் தொடரப்படாதிருப்பதையும் உறுதிசெய்யுமாறு அரசாங்கத்தைக் கோருகிறோம்.

மேலும், இச் சம்பவத்தைத் தமது அற்ப அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தாமல், அதற்குப் பதிலாகத் தமது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து நின்று இலங்கையை மீளக் கட்டியெழுப்புமாறு எமது அரசியல்வாதிகளை வேண்டுகின்றோம். இது, தமது பொறுப்புக்களைத் தட்டிக்கழிப்பதற்கும் மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதற்குமான நேரமல்ல. சுய மதிப்பீடும், சிந்தனையும் அத்துடன், எமது தவறுகளை ஏற்றுக்கொள்வதுமே முன்னோக்கிச் செல்வதில் இப்போது எமக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

பயங்கரவாதத்திற்கும் கடும்போக்குவாதத்திற்கும் மதமே கிடையாது என்பதையும், நாம் ஒன்றாய் இணைந்து இத் தீவிரவாதக் குழுக்களை முறியடிக்கவேண்டும் என்பதையும் எமது சக இலங்கையர்களுக்கு நாம் நினைவூட்ட விரும்புகிறோம். சினங் கொள்வதற்கான அல்லது பழிவாங்குவதற்கான நேரமல்ல இது. நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுவது அதிகாரம் உள்ளவர்களின் கைகளில்மட்டுமே உள்ளது. தீவிரவாதிகள் மட்டுமே தமது செயல்களுக்குப் பொறுப்பானவர்கள்; அவர்களது சமூகங்களோ, மதங்களோ அல்ல. எமது செயல்கள் அச்சத்தைப் பரப்புபவையோ, இனரீதியானவையோ, துன்பம் தருபவையோ அல்லது பிளவுபடுத்துபவையோ அல்ல என்பதை உறுதிப்படுத்தும் வகையில், எவ்வேளையிலும் எமது நடத்தையில் நாம் கவனமாயிருப்பதுடன், தவறான தகவல் பரவுவதைத் தடுக்க நாம் விவேகத்துடனும் செயற்படவேண்டும்.

சோதனைமிக்க இக் காலகட்டத்தில், இலங்கை வலிமை வாய்ந்ததாய் உள்ளது என்பதை உறுதிப்படுத்த, சிவில் சமூகம் என்ற வகையில் எமக்கொரு முக்கிய வகிபாகம் உண்டு. பன்மைத்தன்மையையும், அனைத்து விழுமியங்களையும் முன்னேற்றியவாறு, சமூகங்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும், சனநாயக வழிமுறைகளூடாகத் தீர்வுகளைக் காண்பதிலும் மேலும் நாம் முயற்சி எடுக்கவேண்டும். இறுதியாக, இத்தகைய அட்டூழியங்கள் மீளவும் இடம்பெறாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் நம் அனைவருக்கும் பாரிய ஒரு பொறுப்புண்டு.